## கமநல அபிவிருத்தி நிதியம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை கமநல அபிவிருத்தி நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,870,082 பெறுமதியான கணனி மென்பொருள் முறைமை ஆண்டின் இலாபத்திற்கு எதிராகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) டிராக்டர் மற்றும் நீர்ப் பம்பிகளுக்காக அறவிடப்பட்ட தவணைப்பணம், காசு அடிப்படையில் வைப்புக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் பெறவேண்டிய தவணைப்பணம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களிற்கு கணக்கிற்கு முற்கொண்டுவரப்பட்டோ அல்லது குறிப்பொன்றின் மூலமோ வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(அ) மீளாய்வாண்டின் போது ‘‘ஜப்பான் யென் உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் ’’ கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட டிராக்டர்களுக்காக அறவிடப்பட்ட தவணைப் பணம் ரூபா 56,376,207 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அபிவிருத்திப் பிரிவின் அறிக்கையின் படி இது ரூபா 52,179,498 ஆனமையால் ரூபா 4,196,709 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) பொது வைப்புக் கணக்கின் மீதியும் திறைசேரி கணனி அச்சீட்டு தாளில் காண்பிக்கப்பட்ட மீதிகளுக்கும் இடையே ரூபா 651,797 தொகையான வேறுபாடு 04 ஆண்டுகளுக்கு மேலான காலம் முதல் நிலவிய போதிலும் இது மீளாய்வாண்டின் இறுதி வரை சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(அ) ‘‘ஜப்பான் யென் உதவி நிகழ்ச்சித்திட்டத்தின்’’ கீழ் மானியமாகக் கிடைக்கப்பெற்றவை விவசாய உபகரணங்கள், தவணை முறையில் கொடுப்பனவு செய்யப்படும் அடிப்படையில் விவசாயக் குழுக்கள் மற்றும் விவசாயச் சங்கங்களுக்கு வழங்கப்படுகையில் மானியத்தில் 50% அளவானவை மறுதரப்பு நிதிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்தது. இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த டிராக்டர், தெளிப்பு இயந்திரம் மற்றும் நீர் பம்பிகளுக்காக விவசாயக் குழுக்கள் மற்றும் விவசாயச் சங்கங்களில் இருந்து அறவிடப்பட்ட ரூபா 210,878,908 தொகை மறுதரப்பு நிதிக்கு செலவு வைக்கப்படுவதற்காக கமத்தொழில் அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்படுவதற்குப் பதிலாக 2011 திசெம்பர் 31 வரை நிதியத்தின் வைப்புக் கணக்குகளில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டிலும் பகிர்ந்தளிக்கப்பட்ட டிராக்டர்களுக்கான தவணைப்பணத்தை அறவிடுவது மிகவும் மந்தமான நிலையில் காணப்பட்டதுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான தவணைப்பணம் ரூபா 472,131,445 ஆகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| டிராக்டர் வகை | டிராக்டர் பகிர்ந்தளித்த வருடம் | டிராக்டர்களின் எண்ணிக்கை | அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா | அறவிடப்பட்ட தொகை ரூபா | நிலுவைத் தொகை ரூபா |
|---|---|---|---|---|---|
| 02 உழவு இயந்திரம் | 1992 - 2008 | 1596 | 225,204,050 | 138,014,933 | 87,189,117 |
| 02 உழவு இயந்திரம் | 2010 | 1004 | 251,000,000 | 56,426,804 | 194,573,196 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 04 உழவு இயந்திரம் | 1986 - 2001 | 591 | 214,081,210 | 23,712,078 | 190,369,132 |
| கூட்டுத்தொகை | | 3191 | 690,285,260 | 218,153,815 | 472,131,445 |

(இ) 1995 ஆம் 1996 ஆம் ஆண்டுகளின் போது நிதியத்தினால் நிதியத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்ட 02 உழவு இயந்திரம் மற்றும் 04 சக்கர உழவு இயந்திரங்களுக்கு 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவைத் தவணைப்பணம் முறையே ரூபா 1,498,566 தொகையும் ரூபா 4,749,500 ஆனபோதிலும் மீளாய்வாண்டின் போது எவ்வித தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 ஆம் ஆண்டிற்கு முன்னர் இனங்காணப்பட்ட இருப்புக் குறையான ரூபா 450,000 பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டின் போது 23 மாவட்டங்களுக்கு ஏக்கர் வரியாக ரூபா 9,130,716 தொகை பெறப்பட்டிருந்த போதிலும் இம் மாவட்டங்களுக்கு வருடாந்த இலக்கிடப்பட்ட வருடாந்த ஏக்கர் வரி, பெறப்பட்ட ஏக்கர் வரி மற்றும் பெறவேண்டிய ஏக்கர் வரி தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக ஏக்கர் வரியாக குறித்த கமநல சேவை நிலையங்களினால் அறவிடப்பட்டுள்ள மொத்தத் தொகையில் 20% கமநல அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் உள்ள மொத்தத் தொகையில் 20% கமநல அபிவிருத்தி நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததா என்பது குறித்து கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

நிதியத்தினால் பல்வேறு செயற்பாடுகளுக்காகப் பெறப்பட்டிருந்த ரூபா 2,432,892 பெறுமதியான முற்பணக்கணக்குகள் தீக்கப்பட்டிராததுடன் இது தொடர்பாக நி.பி. 371(5) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகளின் விளைவு ரூபா 1,690,383 பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா 3,575,521 ஆனமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 1,885,138 அதிகரிப்பு காணப்பட்டது. ஏக்கர் வரி வருமானமும் பற்றுச்சீட்டு புத்தக விற்பனை வருமானமும் ரூபா 2,490,147 ஆல் அதிகரித்தமை நிதிசார் விளைவுகளின் அதிகரிப்பிற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(அ) மீளாய்வாண்டின் போது 126 கைவிடப்பட்ட உழவு இயந்திரங்கள் ரூபா 13,613,500 இற்கு விற்பனை செய்யப்பட்டு இத் தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அந்த உழவு இயந்திரங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்த கமநல சேவைக் குழுக்களில் இருந்து வினைத்திறனான தவணைப்பணம் அறவிடப்படும் செயற்பாடு இன்மையால் அந்த உழவு இயந்திரங்களிற்கு நிலுவைத் தவணப்பணமாக ரூபா 19,039,513 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) “யப்பான் உதவி 2008” செயற்திட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆம் ஆண்டின் போது பகிர்ந்தளிக்கப்பட்ட 390 நீர்ப் பம்பிகளுக்காக ரூபா 11,700,000

தொகை 2012 ஆம் ஆண்டின் போது தவணை முறையில் சேகரிக்கப்பட வேண்டியதுடன் அதன் அடிப்படைக் கொடுப்பனவாக ரூபா 3,120,000 அறவிடப்பட வேண்டிய போதிலும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அடிப்படைக் கொடுப்பனவு மற்றும் தவணை முறையில் அறவிடப்பட்டிருந்த தொகை ரூபா 3,372,883 ஆகக் காணப்பட்டது.

(இ) நிதியத்தினால் பல்வேறு செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்காக மீளாய்வாண்டின் போது மாவட்டச் செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 517,500 தொகையான முற்பணம் அச் செயற்திட்டம் செயற்படுத்தப்படாது மீள அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் 03 மாவட்டக் காரியாலயங்கள் உரிய செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 65,500 தொகையான காசோலைகள் பொறுப்பேற்கப்படாது மீள அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

## 3.2 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்

(அ) கிராமிய நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் நீர்த் தரத்தை ஆய்வுசெய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ஆறுகள் மற்றும் வாவிகளின் வரைபடம் அல்பத்தின் 500 பிரதிகள் அச்சிடப்படுவதற்காக ரூபா 543,915 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2012 ஆகஸ்ட் 31 வரையிலும் அவற்றைப் பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது கிராமிய நீர்ப்பாசனத் தரவுகள் கைநூல் அச்சீட்டுச் செலவினத்தின் கீழ் 10,000 புத்தகங்களின் அச்சீட்டிற்காக ரூபா 1,444,500 தொகையும் 2011 ஆம் ஆண்டின் போது புத்தக அச்சீட்டிற்காக ரூபா 1,512,000 தொகையும் ரூபா 2,956,500 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2012 ஆகஸ்ட் 31 வரை பகிர்ந்தளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கடந்த ஆண்டுகளின் போது அச்சிடப்பட்ட 1,000 வரைபடங்களில் 594 கமநல சேவை நிலைய அதிகாரப்பிரதேசங்களில் காணப்படும் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் 406 மிகுதியாகக் காணப்பட்டன.

## 4. கணக்களிப்பு நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(அ) 2011 ஆம் ஆண்டின் போது 04 அபிவிருத்திச் செயற்பாடுகளிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 6,275,000 தொகையான ஏற்பாடு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான எண்ணிக்கைகளுக்கு இடையே கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஏக்கர் வரி அறவீடு

(ஆ) வைப்புக் கணக்குகள் தீர்க்கப்படல்

(இ) கடன் அறவீடு

(ஈ) சொத்துப் பயன்பாடு

(உ) முற்பண வழங்கல்